பக்கங்கள்; ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6·00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 17 வியாழக்கிழமை (01-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 166

# புலிகளுடன் சமாதான பேச்சுக்கான கதவை அரசு இன்னும் மூடவில்லை

## அமைச்சர் பீரிஸ் சொல்கிறார்

கொழும்பு, ஓகஸ்ட் 1

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான கதவை அரசாங்கம் மூடிவிடவில்லை; அவர்களை தூர விலக்கி வைக்கவும் இல்லை.

அரசமைப்பு விவகாரம், நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இவ்வாறு தாம் நேற்று நடத்திய வெளி நாட்டுப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் பேசி போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் அவரது பதில்கள் அமைந்திருந்தன.

விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என்று சில இடங்களில் இருந்து பலதரப்பட்ட சமிக்ஞைகள் வருகின்றன. அவை எவ்வளவு அதிகாரபூர்வமானவை என்பது எமக்குத் தெரியவில்லை— என்றும் அவர் கூறினார்.

எனினும் புலிகளின் அரசியல் பிரிவுடன் பேசுவதால் பயன் கிடைக்கும் என்பதில் தனக்கு நம்பிக்கை இல்லை என்பதனையும் அவர் சொல்லினிடையே சுட்டிக்காட்டினார்.

போரினால் பொருளாதாரம் எந்தளவுக்குக் கீழ் நோக்கிப்போகிறது என்பதனையும் அதன் பாதிப்புகளையும் வாய் திறந்து வெளிப்படையாகச் சொல்லும் வகையில் அமைச்சரின் நேற்றைய பத்திரிகையாளர் மாநாடு அமைந்தது.

பொருளாதாரச் சீரழிவை தடுத்து நிறுத்த யுத்தமல்ல, சமாதானத் தீர்வே உகந்தது என்பதனை அரசு உணர்வதாகவும் அவரது கருத்து அமைந்திருந்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வெடித்து 3 சிறுவர் அரியாலையில் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் மூன்று சிறுவர்கள் உயிரிழந்தனர்.

அநாதரவாகக் கிடந்த ஷெல் ஒன்று வெடித்தே மூன்று சிறுவர்களும் பலியாகியிருக்கலாம் எனக் கருதப்பட்டது.

மூன்று சிறுவர்களின் சடலங்களும் நேற்று முன்தினம் மாலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன. மூன்று சிறுவர்களினதும் சடலங்களும் பிளவுபட்டும், சிதறுண்டும் காணப்பட்டன.

அரியாலை தபாற்கட்டைச் சந்திப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்று வருவதிலிருந்து ராவுக்கு தற்காலிக விலக்கு

### உச்ச நீதிமன்றம் வழங்கியது

புதுடில்லி, ஓக. 1

லகுபாய் பதக் மோசடி செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் டில்லி தலைமை பெருநகர மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நாளை ஆஜராக வேண்டிய கட்டாய நிலையிலிருந்து உச்ச நீதிமன்றம் நேற்று அவருக்கு தற்காலிக விலக்களித்திருக்கின்றது.

நரசிம்மராவின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு அனுமதி கோரிக்கை மனு ஒன்றின் மீது தலைமை நீதிபதி ஏ. எம். அகமதி, நீதிபதி அன்சாரியா ஆகியோர் இவ்வாறு இடைக்கால உத்தரவு பிறப்பித்தனர்.

மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கோரி தமக்கு அனுப்பப்பட்ட நோட்டீஸை ரத்துச் செய்ய வேண்டும் எனக் கோரி நரசிம்மராவ் சமர்ப்பித்திருந்த ஒரு மனுவை டில்லி உயர் நீதிமன்றம் ஏற்கனவே நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியிருந்தது தெரிந்ததே. அந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து

(6ஆம்பக்கம் பார்க்க)

## 45 வயதுக்கு மேற்பட்டவரே வவுனியா செல்லமுடியுமா[?]

### தாண்டிக்குளத்தில் புதிய கட்டுப்பாடு

கொழும்பு, ஓக. 1

வடக்கில் இருந்து 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் மாத்திரமே இனிமேல் தாண்டிக்குளம் ஊடாக வவுனியாவுக்குள் அனுமதிக்கப்படுவராம்.

பாதுகாப்புப் படையினர் தரப்பில் மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேசமயம் தாண்டிக்குளம் ஊடாக பயணிகள் வட பகுதிக்கு செல்ல நேற்று முன்தினமும் அனுமதி வழங்கப்பட்டது என்றும்—

வடக்கில் இருந்து எவரும் வவுனியாவுக்குள் வர அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

## குடாநாட்டில் ஒருவருக்கு 'எய்ட்ஸ்' எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஓக. 1

எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஒருவர் யாழ். குடாநாட்டில் இருப்பது தெரிய வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஏழு வருடங்கள் குவைத்திலும், சவூதி அரேபியாவிலும் வேலைபார்த்து விட்டுத் திரும்பிய இவர் தற்போது இந் நோயினால் பீடிக்கப்பட்டிருக்கலாம் என யாழ். ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க ஆய்வில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவரின் இரத்த பரிசோதனையை மேற்கொண்டபோது எய்ட்ஸ் நோய்க்கான அறிகுறிகள் இருப்பது தெரியவந்ததாம்.

மேலும் இதனை உறுதிப்படுத்தும் பொருட்டு மேலதிக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தனில் பெருமளவு படைக் குவிப்பு; அடுத்த இலக்கு கிளிநொச்சியாம்

கொழும்பு, ஓக. 1

ஸ்ரீலங்கா ராணுவம் விடுதலைப் புலிகள் மீது மிகப் பெரும் தாக்குதல் நடத்துவதற்காக பரந்தனில் படைகளைக் குவித்து வருவதாக சிங்கப்பூர் வானொலி நேற்று செய்தி வெளியிட்டது.

பரந்தனில் இருந்து 6 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிளிநொச்சியே படையினரின் அடுத்த இலக்கு என்றும்—

ஆனால் உடனடியாக தாக்குதல் ஆரம்பிக்கப்பட மாட்டாது என்று அதிகாரிகள் தெரிவித்ததாகவும் —

விடுதலைப் புலிகள் புதைத்துவைத்துள்ள கண்ணி வெடிகளையும் பொறிவெடிகளையும் அகற்ற வேண்டி இருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் என்றும் அந்த வானொலிச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகள் மீது தாக்குதல்நடத்த படையினர் தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா பாதுகாப்புத்துறைச் செய்திகளை ஆதாரம் காட்டி வெரித்தாஸ் சிங்கள சேவையும் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3-10)

## போக்குவரத்து தடங்கல் தொடரும்

யாழ்ப்பாணம், ஓக. 1

வலிகாமம் மேற்கு மற்றும் வலிகாமம் தெற்குப் பகுதியைச் சேர்ந்தோர் யாழ். நகருக்கும் ஏனைய பகுதிகளுக்கும் செல்வதற்கான பாதையாக இருக்கும் — தட்டா தெருச் சந்தி ஊடான — பாதையில் மறு அறிவித்தல் வரை போக்குவரத்துத் தடங்கல் இருக்கும் என்று தெரிய வருகின்றது.

அரச ஊழியர், மாணவ, மாணவியர், நோயாளர் போன்றோர் மட்டுமே இப் [illegible] வர அனுமதிக்கப்படுவர் என்றும் தெரியவந்தது.

(உ-3]

## கிளிநொச்சி நோக்கி படையினர் ஷெல் வீச்சு

கொழும்பு, ஓக. 1

கடந்த ஐந்து நாள்களாக பரந்தனில் இருந்தும், ஆனையிறவில் இருந்தும் கிளிநொச்சியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது ஷெல்தாக்குதல்கள் நடத்தப்படுவதாகவும் —

இதனால் 2 லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து வீதி ஓரங்களிலும், மர நிழல்களிலும் தங்கி யுள்ளதாகவும் — தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் இலங்கை இராணுவம் திட்டமிட்ட படி கிளிநொச்சி நோக்கிச் செல்ல முற்பட்டால், அதன் விளைவு மனித உயிர்களுக்கு மிக மோசமாக இருக்கும் என லண்டனில் வெளியாகியுள்ள பத்திரிகை ஒன்றில் விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளனர் என இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது.

(இ-3)

## புலிகள் தொடர்ந்து மோட்டார் தாக்குதல்

கொழும்பு, ஓக. 1

பரந்தன் பகுதியில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து மோட்டார் தாக்குதல் நடத்துகின்றனர் என்றும்—

பாதுகாப்புப் படையினர் பீரங்கிகளின் உதவியுடன் தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்றும் —

விமானப்படையினர் தரையில் உள்ள படையினரின் உதவியுடன் புலிகளின் நிலைகள் மீது தொடர்ந்தும் தாக்குகின்றனர் என்றும் இலங்கை வானொலி தெரிவித்தது.

[இ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி

**ஏ. எல். ஏபிரகாம் M. B. B. S.**

யாழ். பல்கலைக்கழக விலங்கியற்துறை சிறப்புப் பட்டதாரி மாணவி செல்வி நிலாந்தினி, முன்னாள் உதவி விரிவுரையாளர் திருமதி ஜே. கிருஷாந்தி ஆகியோரின் தந்தையாரின் அகால மரணச் செய்தி அறிந்து கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம்.

யாழ். பல்கலைக்கழக
விலங்கியற் துறையினர்.

(41761)

## IN MEMORIAM



**ARULPIRAGASAM VICTOR RAJAKULASINGHAM**

Born: **26th May 1916**
Departed: **1st August 1995**

Deep in our hearts you are always near
Still loved, still missed and yet very dear
Time rolls on, one year have passed
God grant you peace in heaven alone
While in our hearts you dwell in love

Fondly remembered by your
loving son Karunai and
Daughter-in-law Amirtha.

1, Hensman lane,
Chavakachcheri.

(41756)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 15 - 10 - 1935



உதிர்வு: 04 - 07 - 1996

அமரர் திருமதி

**இந்திராணி அருணாசலேந்திரர்**

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி இந்திராணி அருணாசலேந்திரர் அவர்கள் 4. 7. 1996 அன்று காலமானார். இவர் அருணாசலேந்திரரின் (ஓய்வு பெற்ற அரசாங்கலிகிதர்) அன்பு மனைவியும் இளைய பெருமாள் (Germany), மாலினி (Canada), கணேசன், ஷாமினி, சிவனருள் (Germany) ஆகியோரின் அன்புத் தாயாரும், து. விஜயன் (Canada), ப. யோகேந்திரராசா (மத்தியகிழக்கு), கிருபாலட்சுமி, பிருந்தாதேவி, பிறமிளா (Germany) ஆகியோரின் மாமியாரும், சுஜிதா, அஜித்தா, நீரஜா, ஆஷா, வர்ணன், நிரோஷன், கார்த்திகாயினி, கார்த்திகேயன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் 4. 7. 96 அன்று வல்வெட்டித்துறையில் நடைபெற்றன.

3. 8. 96 ஆம் திகதி வல்வெட்டித்துறையில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வகைகளிலும் உதவியவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:-
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்-
K. E. அருணாசலேந்திரர்.

சத்திரங்கை,
கம்பர் மலை,
வல்வெட்டித்துறை.

(41910)

## சமய சந்நிதிகளில்

ஆடிவேல் விழாவை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை நல்லூர் ஸ்ரீ பால கதிர்காமம் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும்.

இன்று பி. ப. 3-30 மணிக்கு ஆடிவேல் ரதம் சட்டநாதர் ஆலய வீதியை வலம் வந்து அதனையடுத்து அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

கடந்த வருடம் ஆடிவேல் ரதம் யாழ். நகரின் முக்கிய வீதிகள் வழியாக மூன்று தினங்கள் பவனிவந்தது குறிப்பிடத்தக்கது. (அ-111)

* * *

பண்ணாகம் ஆலடி வைரவப் பெருமான் ஆலயத்தில் பன்னிரு திருமுறை படிப்பு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து தினமும் பிற்பகல் 2-30 மணி முதல் 4-30 மணி வரை நடைபெறும் இத் திருமுறைப் படிப்பில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் பங்கு கொள்கின்றனர். (அ-28)

## 3 கிளைகள் மட்டுமே இயங்குகின்றன

தென்மராட்சி, ஒக 1

பளைப் பிரதேசத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று கிளைகளும், — பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று கள்ளுத் தவறணைகளுமே தற்போது இயங்கி வருகின்றன.

பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பதினொரு கிளைக் கடைகளும், பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் பதினொரு கள்ளுத் தவறணைகளும் இனம் தெரியாதோரால் கொள்ளையிடப் பட்டதால் மீண்டும் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கள்ளுத் தவறணைகள் இருந்த இடமே தெரியாத அளவுக்கு கொட்டில்கள், தளபாடங்கள், ஆகியவை எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (இ117)

## கிறிஸ்தவ ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஒக. 1

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பழைய நேரப்படி காலை 10 மணிக்கு யாழ். நகரப்பணி மண்டபத்தில் நடைபெறும். சகல அங்கத்தவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். (அ)

## மண்எண்ணெய் விலை குறைப்பு

கொழும்பு, ஒக. 1

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் யாழ்ப்பாணத்தில் ஒரு லீற்றர் மண்எண்ணெய்யின் விலை 25 ரூபாவிலிருந்து 11ரூபா 50 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என இலங்கை வானொலி தெரிவித்தது. (இ-10)

## நல்லைக் குமரன் வெளிவரும்

கொழும்புத்துறை, ஒக. 1

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு இவ்வருடமும் யாழ். மாநகர சபை சைவசமய விவகாரக் குழுவினர் ''நல்லைக்குமரன்'' மலரை வெளியிடவுள்ளனர்.

சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும் மாநகர சபை வைத்திய அதிகாரியுமான [illegible] தெரிவித்தார். (அ-30)

## நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**AL 98**

**கலை வர்த்தக வகுப்புகள் ஆரம்பம்**

**03 - 08 - 96** (சனி)

வழமையான ஆசிரியர் குழு

—நிர்வாகி

(சி-2692)

## வில்லூன்றி புனித தீர்த்தம்

### அந்தியேட்டிக் கிரியைகள்

அந்தியேட்டிக் கிரியைகள் செய்வதற்கு கடலோடு சேர்ந்தமைந்த புண்ணிய தீர்த்தக் கரைகள் விசேடமானவை. வில்லூன்றி க்ஷேத்திரம் மூர்த்தி, தல, தீர்த்த மகிமையுடையது.

அமைதியான, அழகான, பாதுகாப்பான, துப்புரவான சூழலில் அந்தியேட்டிக் கிரியைகள் செய்யக் கூடியவொரு இடமாக வில்லூன்றி விளங்குகின்றது. சகல வசதிகளுடன் பல இலட்சம் ரூபா செலவில் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பாக கடலில் அஸ்தி கரைக்கும் வசதியும் உண்டு.

உங்கள் குடும்பக் குருக்களை அழைத்து வந்தும் கிரியைகளைச் செய்விக்கலாம். மூன்று நாள் முன்னறிவித்தலுடன் விண்ணப்பிப்பின், தகுதியான குருக்களும் தரமான கிரியைப் பொருள்களும் ஒழுங்கு செய்து தரப்படும்.

மேலதிக விவரங்களைப் புனித தீர்த்த அந்தியேட்டி மடத்தில் காலை 7.00 மணிக்கும், மாலை 5.00 மணிக்குமிடையே பெற்றுக் கொள்ளலாம்.

பரிபாலன சபை

வில்லூன்றி,
31-07-96.

[41764]

## அறிவித்தல்

### தொழில் வங்கியில் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

யாழ். மாவட்டத்தில் தொழிலற்று இருப்போரைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் முடிவுத் திகதி **1996-08-10** வரை நீடிக்கப்பட்டுள்ளது. அவ்வப்பகுதி பிரதேச செயலகங்கள்/உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

செ. பத்மநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(சி/2694)

## நல்லூர் பிரதேசத்தில்

விடியும் வேளை

**"உதயன்"**

நாளிதழை வீடுகளில் பெறவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்க:

**ஏ.எம்.ஆர். ஸ்தாபனம்,**
186, கோயில் வீதி,
முடமாவடி,
நல்லூர்.

## யூனிவேர்சல்

கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

**புதிய பிரிவு OL**

(துரித மீட்டல் வகுப்பு)

ஆரம்பம்:
**03-08-96** சனி மாலை 3-00 மணி

★ முன்னதாகவே அனுமதியை உறுதி செய்து கொள்ளவும்.

—நிர்வாகம்.

(42046)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மத்திய கல்லூரியின்
# 180 ஆவது ஆண்டு நிறைவுவிழா
# ★ சிறப்பிதழ் ★

(1-8-1816 --- 1-8-1996)

## இன்றுபோல் என்றும் ஆகுக!

கல்விசார் பெரும் தகையீர்!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 180 ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் கலாநிதி வண. பிதா பீற்றர் ஞாபகார்த்த தபால் தலை வெளியிட இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

யாழ்ப்பாணத்தினுடைய கல்விப் பாரம்பரியத்தில் தனியான ஓர் இடத்தை யாழ். மத்திய கல்லூரி அமைத்துக்கொண்டது. அதுபோல இன்றும், என்றும் கல்வியில் தனியான இடத்தை வகித்துக் கொள்ள இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க பழைய மாணவர் சங்கம்!
வளர்க யாழ். மத்திய கல்லூரி!
''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்
நல்லை. திருஞானசம்பந்தர் ஆதீனம்
யாழ்ப்பாணம்

## வீறுநடை போடும் தாய்

யாழ்ப்பாணத்தில் 01-08-1816 ஆம்திகதியன்று ஆரம்பித்த யாழ். மத்திய கல்லூரி 180 ஆண்டுகள்— மூன்று தலைமுறைகளை — 01 - 08 - 1996 அன்று பூர்த்தி செய்வது சிறப்பம்சமாகும். இதனை ஒட்டி வண. பிதா. கலாநிதி பீற்றர் பேர்சிவல் அடிகளாரை நினைவு கூர்வது எமது நன்றிக் கடனாகும்.

எமது கல்லூரிக்கென உருவாக்கப்பட்ட தனிப் பாரம்பரியத்தைப் பேணுதல் எமது தலையாய கடமையாகும். தமிழில் பாண்டியத்தியம் பெற்றவரும் - பைபிளை தமிழ் மொழியாக்கம் செய்தவருமான ஆறுமுகநாவலர் அவர்களை ஊக்குவித்த பெருமையும் பேர்சிவல் அடிகளாரையே சாரும்.

வணிகக் கல்வியையும், துடுப்பாட்டம், காற்பந்தாட்டம் போன்றவற்றையும் யாழ்ப்பாணத்திற்கு அறிமுகப்படுத்திய எமது கல்லூரித் தாயினை என்றென்றும் மறக்கமுடியாது. மாணவ ஒலிம்பிக் வீரன் எதிர்வீரசிங்கம் அவளின் பூகழ் பூத்த மைந்தரில் ஒருவர்.

சமகாலத்தில் எமது கல்லூரித்தாய் உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிக்கப்பட்ட போதும் சளைக்காது வீறுநடை போடுகின்றாள். மேலும் சிறப்புற்று விளங்க பழைய மாணவர் சளைக்காமல் உழைக்க வேண்டும். கொழும்பு பழைய மாணவர் சங்கமும் அதன் தலைவர் திரு கா. தயாபரன் அவர்களும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

இன்று வண பிதா. கலாநிதி பீற்றர் பேர்சிவல் அவர்களை நினைவு கூர்ந்து இரண்டு ரூபா தபால் தலையும், முதல் நாள் உறைவெளியிடுவதன் மூலம் எமது அன்னையின் பெருமையையும் புகழையும் உலகம் முழுவதும் கமழச் செய்வதில் மனநிறைவெய்துகின்றேன். இதனை உருவாக்கிய உள்ளூர் கலைஞர் திரு. இராசையாவுக்கும் திரு. சயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

இ, இராசாராம்
யாழ்: மத்திய கல்லூரி தலைவர்,
யாழ்ப்பாணம். பழைய மாணவர் சங்கம்

## மேன்மேலும் வளர்க

இரண்டு நூற்றாண்டுகளை எட்டி வளர்ந்து கொண்டிருக்கும் எமது சகோதரப் பாடசாலை தபால்தலை வெளியிடுவதையிட்டு நாமும் பெருமை கொள்கிறோம்.உரிமையுடன் பங்கு கொள்கிறோம்

மத்திய கல்லூரி என்ற விருட்சத்தின் விழுதுகள் சிறந்தும், பரந்தும் கல்லூரியின் விழுமியங்களை பறைசாற்றி நிற்கின்றன என்பது கண்கூடு.

இக் கல்லூரி மேன்மேலும் வளர்ந்து, சிறந்து, நிறைந்து பல நூற்றாண்டுகள் வாழ வேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
வேம்படி மகளிர் கல்லூரி

## தலை சிறந்த கல்லூரி

யாழ். மத்திய கல்லூரி தனது 180 ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் இக்காலத்தில் தனது ஸ்தாபகரான வண. கலாநிதி பீற்றர் பேர்சிவல் அடிகளாரின் நினைவாக தபால் முத்திரை வெளியிடுவது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

யாழ். மக்களின் கல்வி வளர்ச்சியிலும், சமூக வாழ்விலும் தம் வாழ் நாளை அர்ப்பணித்த பேர்சிவல் அடிகளாரை நினைவு கூர்வதும், கௌரவிப்பதும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். எம் மக்களின் நன்மைக்காக, கல்வித் துறையைக் கட்டியெழுப்ப, யாழ். மத்திய கல்லூரியை எம் மக்களுக்கு பரிசளித்தவர் அடிகளார். அவர் கடைசிவரை தம் வாழ்வை கல்வி வளர்ச்சிக்குச் செலவிட்டது மட்டுமல்லாமல், சமூக ஒற்றுமையையும், சமுதாய விழிப்புணர்வையும் ஊட்டியதை மறக்கவே முடியாது.

தலைசிறந்த கல்லூரியை இத் தமிழ் மண்ணிற்குத் தந்த பேர்சிவல் அடிகளாரின் பணியை மத்திய கல்லூரியும், பழைய மானவர் சங்கமும் தொடர்க என்றும் இறையாசி வேண்டுகிறேன்.

அருட்திரு. கு. நித்தியானந்தன்
மெதடிஸ்த திருச்சபை
யாழ்ப்பாணம்.

## பெருமைக்குரிய நிகழ்வு

நீண்ட வரலாற்றையும், கல்விப் பாரம்பரியத்தையும் கொண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தன்னலமற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் உன்னத சேவையினால் இன்றைய நிலைக்கு உயர்ந்துள்ளது.

கல்வி, விளையாட்டு, சாரணீயம் மற்றும் புறபாடவிதானச் செயற்பாடுகள் மூலம் மாணவரின் பல்வேறுபட்ட திறன்களை வளர்த்துப் பல்துறை விற்பன்னர்கள் உருவாக வழி செய்கின்றது.

அண்மைக்கால யுத்த சூழ்நிலையினால் பெரிதும் பாதிக்கப்பட்ட போதும் தனது சேவையைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது.

புகழ் பூத்த எமது கல்லூரியின் 180 ஆவது ஆண்டு நிறைவு தினமான இன்று எமது கொழும்புக் கிளைப் பழைய மாணவர் சங்கத்தின் பெருமுயற்சியினால் ஞாபகார்த்த முத்திரை ஒன்று வெளிவருவது எனக்குப் பெரு மகிழ்ச்சியையும், பெருமையையும் அளிக்கின்றது

செ. சிவன்ரூபன்,
அதிபர்.
யாழ். மத்திய கல்லூரி.

## பழம் பெரும் கல்லூரி

யாழ்.மத்திய கல்லூரி தனது 180ஆவது ஆண்டு நிறைவு விழாவையும், வண. பிதா கலாநிதி பீற்றர் பேர்சிவல் ஞாபகார்த்தமாக தபால் தலை மற்றும் முதல் நாள் உறை வெளியீட்டு விழாவையும் 1 - 8 - 96 அன்று நடாத்துவது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ். மத்திய கல்லூரி யாழ்ப்பாண மாவட்டத்தில் பாராட்டக்கூடிய கல்லூரியாக மட்டுமல்லாமல், பழைமைபெற்ற ஒரு கல்லூரியாகவும் விளங்குகின்றது. இக்கல்லூரி உருவாக்கிய மக்கள் பல இடங்களில் பல பகுதிகளில் சிறந்த மக்கள் சேவையை செய்து வருகின்றனர்.

பிரித்தானியர் ஆட்சியின் பொழுது அவர்களாலே ஆரம்பிக்கப்பட்டு, அவர்களாலே வழிகாட்டப்பட்டு வந்த கல்விக் கழகங்களே, இன்று வரை யாழ். மாவட்ட மக்களது சொத்தாகக் கல்வி இருந்து வருவதற்குக் காரணமாக உள்ளன.

இந்நிலைக்கு முன்னோடியாக இருந்த வண. பிதா கலாநிதி பீற்றர் பேர்சிவல் அவர்களது ஞாபகார்த்தமாக இலங்கை அரசாங்கம் 2 ரூபா பெறுமதியான தபால் தலையை வெளியிடுவது வரவேற்கத் தக்கது.

செ. பத்மநாதன்
யாழ்ப்பாணம். அரசாங்க அதிபர்,

## கல்விப்பணியைத் தொடர்க!

யாழ். நகரில் அமைந்துள்ள மத்திய கல்லூரி தனது 180 ஆவது நிறைவு விழாவைச் சிறப்புடன் நினைவுகூரும் இத்தருணத்தில் இக்கல்லூரி தமிழ் பேசும் மாணவர்களுக்குச் செய்துள்ள அளப்பெரும் கல்விச் சேவைகளை நன்றியோடு நினைவு கூருகின்றோம். மெதடிஸ்த இறைபணியாளரையும், சிறப்பாக இக்கல்லூரியை நிறுவிய வண. கலாநிதி பீற்றர் பேர்சிவலையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

தற்கால நிகழ்வுகளால் பெரிதும் பாதிப்புற்றிருக்கும் இக்கல்லூரி மாணவ சமூகத்திற்கு தொடர்ந்து தனது சேவைகளையாற்றுவது பாராட்டத்தக்கது.

அகர முதல எழுத்திற்கெல்லாம் ஆதியாய் நிற்கும் இறைவன் இக்கல்லூரியின் முயற்சிகள் அனைத்தையும் ஆசிர்வதிக்க வேண்டுகின்றேன்.

இறையாசீர்.

கலாநிதி
தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
யாழ். ஆயர்

## ஞானவிளக்கம் பேர்சிவல்

இன்று நூற்றெண்பதாவது (180 ஆவது) அகவை நிறைவு செய்து பொலிவுறும் யாழ். மத்திய கல்லூரித் தாயை அதன் பிள்ளைகளாகிய பழைய மாணவர் சங்கமும், மாணவ - ஆசிரிய குழாமும் உளங்கொண்டு போற்றுகின்றன.

உலகு வாழவேண்டின் அது பழமையில், புதுமையைக் காணவேண்டும். அதன் வழி இன்று நூற்றெண்பதாவது படியில் யாழ். மத்தியகல்லூரி உயர்ந்து பொலிவுறுகிறதென்றால், அதனைத் தாங்கும் அத்திபாரமாகிய ஆரம்பப்படி என்றும் நினைவு கொள்ளவேண்டியதொன்றாகும்.

அந்த அத்திவாரமாக விளங்கிய பேர்சில் அடிகளாருக்கு கல்லூரி தனது நூற்றெண்பதாவது 180 ஆவது)பிறந்த நாளில் அப்பெருமகனாரை உளம் எண்ணி அவருக்குத் தபால் தலையும், உறை வெளியீட்டு விழாவும் அமைத்துத் தன் நன்றிக் கடனைச்செலுத்தி நிற்கிறது. யாழ். மத்திய கல்லூரி என்றும் வளமுடன், மங்கலம் பல பெற எமது மனமார்ந்த நல் ஆசிகள் அமைக.

எஸ். தனபாலன்
அதிபர்
யாழ். பரியோவான் கல்லூரி.

## தலை நிமிர்ந்து நிற்கிறது

யாழ்ப்பாண மத்திய கல்லூரி இரு தசாப்தங்களாகப் பல சேதங்களுக்கும், இடர்களுக்கும் இலக்காகி வருவது தெரிந்ததே. ஒரு சாதாரண பாடசாலை இவ்வகையான தாக்கங்களுக்கு ஈடுகொடுக்க முடியாது தனது தனித்துவத்தை இழந்திருக்கும். ஆனால் மத்திய கல்லூரி சோர்வின்றி தலை நிமிர்ந்து நிற்கிறதெனின் அதற்கு உறுதுணையாக அமைவது அதன் 180 வருடகால நீண்ட வரலாறும், அதன் ஊடாக உருவாக்கப்பட்ட நல்லதொரு பாரம்பரியமும், அந்தப் பாரம்பரியத்தினூடாக உருவாக்கப்பட்ட பழைய மாணவர்களுமேயாவர்.

யாழ்ப்பாணப் பகுதியில் கல்விக்கு பெரும் தொண்டாற்றிய வண. பிதா. கலாநிதி பீற்றர் பேர்சிவல் அவர்களின் ஞாபகார்த்தமாக தபால் தலை வெளியிடுவது பாராட்டுக்குரியதாகும்.

மேலும் இத்தினம் கல்லூரியின் 180 ஆவது வருட பூர்த்தி தினமாகவும் அமைவதனையிட்டு எனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பழைய மாணவர் சங்கத்திற்கு எமது பாராட்டுக்கள்.

அ. பஞ்சலிங்கம்
செயலாளர். யாழ். மாவட்ட பழைய மாணவர் சங்கங்களின் இணையம்.

(4 ஆம் பக்கமும் பார்க்க

மீண்டும் நெல்லியடியில் இயங்குகிறது!
செவ்வாய், வியாழன, சனி காலை 8-30 --- பகல் 12-30
யாழ். வீதி, (மகாத்மா தியேட்டர் அருகில்) நெல்லியடி.
சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், மூக்குக் கண்ணாடிகளைப் பெறுவதற்கும்
இன்றே நாடுங்கள்
லாவண்யா பல், மூக்குக்கண்ணாடியகம்
நெல்லியடி, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## விழாக் குழு

திரு. இ. இராசாராம் B.Sc
தலைவர்

திரு. செ. திருநாவுக்கரசு
உப செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## உதயம் வாடகைக்கு

பீங்கான் ரம்லர், தண்ணீர் ரம்லர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். உதயம்(வைற் கவுஸ் அருகில்)172, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(41870)

## தவறிவிட்டது

முருகேசு அரியமலர் (அம்மன் வீதி, பண்டத்தரிப்பு) ஆகிய எனது 397970116V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை 31-07-96 அன்று யாழ் பஸ்தரிப்பு நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 674, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (41758)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் பெரிய கடை, ஆஸ்பத்திரிக்குக் கிட்டவாக வீடு வாடகைக்கு உண்டு. வீடாகவும்/ ரியூசன் சென்ரராகவும் பாவிக்கலாம். தொடர்பு:- இல:- 508 மே/பா உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(41759)

## மத்திய வங்கி எழுதுநர் பதவிகள்

கொழும்பு, ஜூலை 31

இலங்கை மத்திய வங்கியில் எழுதுவினைஞர்கள் மற்றும் உதவிக் காசாளர் பதவிகளுக்கு கடந்த வருடத்தில் விண்ணப்பம் அனுப்பியவர்களை—

மீண்டும் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் 16ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

இதற்கென உள்ள படிவத்திலேயே விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் என்றும்—

முன்னர் விண்ணப்பித்தவர்கள் மட்டுமே இம்முறை அனுப்பலாம் என்றும்—

முன்னர் கிடைத்த பெரும் எண்ணிக்கையான விண்ணப்பப் படிவங்கள் இவ்வருடம் ஜனவரி 31 ஆம் திகதி மத்திய வங்கியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பினால் தொலைந்து போனதாலேயே மீண்டும் விண்ணப்பம் கோரப்படுவதாகவும்— மத்திய வங்கியின் ஸ்தாபனப் பிரிவு இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மீள விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப் படிவத்தை நாவலர் வீதியில் உள்ள உதயன் பணிமனையில் பார்வையிடலாம்.

(அ)


**AL 98**

**கலை வர்த்தகம்**

ஆரம்பம்: 04– 08– 96

8- 00 மணி

குறிப்பு:

முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

நிர்வாகி:S: அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி யாழ்.

(42014)

**வெளிவாரிப் பட்டப்படிப்புகள்**

**கல்வியாண்டு 96|97**

யாழ்ப்பாண, கிழக்குப் பல்கலைக் கழகங்களின் வெளிநிலைப் பட்டப் பாட நெறிகளான

★ கலை முதற் தேர்வு G. A. Q

★ வணிக முதற்தேர்வு FIRST IN COMMERCE

★ முகாமைத்துவம் MANAGEMENT

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் 3 - 8 - 96ல் ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு,

பட்டப் படிப்புகள் கல்லூரி

74, பருத்தித்துறை வீதி,

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

(41753)


சாவகச்சேரி

அருள்மிகு

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

**மகோற்சவ விழா அழைப்பு**

அன்புடையீர்!

கொடியேற்றம் **4-8-96** ஞாயிறு முற்பகல் 10 மணி

வேட்டைத் திருவிழா: **10-8-96** சனி பி பகல் 2மணி

சித்திரத் தேர்: **12-8-96** திங்கள் மு.பகல் 10 மணி

தீர்த்தத் திருவிழா: **13-8-96** செவ்வாய் மு. பகல் 9 மணி

பூங்காவனம்: **14-8-96** புதன் பி. பகல் 3 மணி

மேற்குறித்த நிகழ்ச்சிகள் யாவும் பழைய நேரப்படியே நடைபெறும்.

விரதம் அனுட்டிப்போர் கொடியேற்றத்தன்று நேரத்துக்கே பெயர்களைப் பதிவுசெய்து சங்கற்பம் செய்து கொள்ளவும்.

தூர இருந்து வரும் அடியார்கள் வசதி கருதி திருக்கதவு பகல்பூராவும் திறந்து இருக்கும்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

இங்ஙனம்:

ப. மகாகணபதி சர்மா

(தர்மகர்த்தா)

(41972)


**AL 97, 98**

**பிரத்தியேக வகுப்பு**

ஆரம்பம்: **5-8-1996**

இந்துநாகரிகம், தமிழ், இந்துசமயம்

ஆசிரியர்: சோமஸ்கந்தராஜக் குருக்கள்

(கண்ணன் மாஸ்டர்)

மாணவர்களின் வசதிக்கேற்ப நேர அட்டவணை தரப்படும்.

''தங்கபுரம்''

நெல்லண்டை வீதி,

தும்பளை — பருத்தித்துறை. [42038]


# 31-ம் நாள் கண்ணீரஞ்சலி

மண்ணில்: 17 – 07 – 1909

விண்ணில்: 02 – 07 – 1996

## அமரர் பர்நாந்து மைக்கல்

(முன்னை நாள் பத்திரிசியார் கல்லூரி விளையாட்டு மைதானக் காப்பாளர்)

ஐயா வென்றும்மை அன்பாயழைத்திடுவோம்
எமை ஆறாத்துயரில் ஆழ்த்தி சென்றதேனோ?
ஐந்தறிவூட்டி யெமை அன்பாயழைப்பீரே
ஐயுற்று நிற்கின்றோம் நின் இழப்பால்
அல்லும் பகலும் கண்ணயராதெமை வளர்த்து
அமுத உணவூட்டி ஆன்மீக வாழ்வில்
இறை பக்தி புகட்டினீரே
ஐயோ எம் உள்ளமெல்லாம் பதறுதே

அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். மரியன்னை பேராலயத்தில் 01 - 08 - 1996 வியாழக்கிழமை காலை 7 - 15 (பழைய நேரம்) மணிக்கு நடைபெறும் திருப்பலியில் பங்கு கொள்ளும் படி வேண்டுகின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

தகவல்;

திரு. றொபேட்

178/10 கொழும்புத்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

(42044)

# சிறப்பிதழ் ...

(3 ஆம்பக்கத்தொடர்ச்சி)

## வளர்ச்சி மேலும் ஓங்குக

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கல்விப் பணியில் நூற்றி எண்பது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. 1816 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் அப்போதிருந்த லூதர் தேவாலயத்திலும் (Lu theran Church) அனாதை இல்லத்திலும், ஒழுங்கமைப்புக் குழுவினால் (Methodist) ஆங்கில பாடசாலையாகவே தற்போதுள்ள மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அருட்திரு யேம்ஸ் லிஞ் (James Lynch) என்பவரும் அருட்திரு ஸ்குயான்ஸ் (Squance) அவர்களும் ஆரம்ப முன்னோடிகளாவர்.

படிப்படியாக இப்பாடசாலை வளர்ச்சியடைந்து 1934 ஆம் ஆண்டு கலாநிதி அருட்திரு பீற்றர்பேர்சிவல் (Peu. Dr. Peter Percuival) அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் மத்திய பாடசாலையாகத் தரமுயர்ந்தது.

மத்திய கல்லூரியின் பெருமைக்கும் ஏனைய பல்துறை வளர்ச்சிக்கும் அடிநாதமாகச் செயற்பட்ட அருட்திரு பீற்றர் பேர்சிவல் அவர்களின் நினைவாக இன்று அரசு தபால்தலையை வெளியிடுவது பெருமகிழ்ச்சி தருகிறது. பழைய மாணவரின் இந்தநன்முயற்சியை வாழ்த்துவதோடு தொடர்ந்தும் கல்லூரியின் வளர்ச்சி சகல துறைகளிலும் ஓங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சு. சோதிலிங்கம்

தலைவர், சென்றலைட்ஸ் வி. க.

முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி


**A/L, 98**

(கலை, வர்த்தகம்)

பிரிவு II

ஆரம்பம்: **04-08-96** காலை 8.00 மணி

**கலை வர்த்தகக் கல்லூரி**

**(C.C.A.)**

(வெலிங்டன்சந்தி அருகாமை) மணிக்கூட்டு வீதி

யாழ்ப்பாணம். (42034)

**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**கலை, வர்த்தகம் 98**

ஆரம்பம்: **04-08-96**

காலை 9 மணி

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. இராஜேஸ்வரன் |
| வர்த்தகம் | — திரு. தரன் |
| கணக்கியல் | — திரு சில்வஸ்தர் |
| அளவையியல் | — திரு. யுகபாலசிங்கம் |
| புள்ளிவிவரவியல் | — திரு. திரிகரன் |
| இந்து நாகரிகம் இந்து சமயம் | — திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — திரு. குணராஜா |
| தமிழ் | — திரு. திருஞானம் |
| அரசியல் | — திரு. சீலன் |
| வரலாறு | — திரு. கோபி |
| கிறிஸ்தவம் | — திரு. வசந்தன் |
| நாடகமும் அரங்கியலும் | — திரு. சத்தியா |

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(41754)


# 31-ம் நாள் நினைவலைகள்

மலர்வு: 27 — 02 — 1939



உதிர்வு: 02 — 07 — 1996

## அப்புக்குட்டி வேலாயுதபிள்ளை

[ஓய்வு பெற்ற கூட்டுறவு பரிசோதகர்]

கல்வியின் கலைமான்
அடக்கத்தில் ஒடுங்கியவன்
அன்பில் சிறந்தவன்
ஆதரவில் ஆறாய்ப் பாய்பவன்
உதட்டின் உச்சரிப்பால்
உள்ளத்தின் ஊற்றெடுப்பால்
வசந்தியை வசந்தத்தில் முகர்ந்தவன்
அருமையாக ஓர் புஸ்பத்தையும்
நாலைந்து செல்வர்களையும்
பாசத்தை பாற்சோறாக வூட்டி
ஆளாக்கிய எம் தெய்வம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,

சகோதரர்கள்.

புகையிரத நிலைய வீதி,

கோண்டாவில்.

[41757]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## போரின் பளு

மாவின் விலை உயர்த்தப்பட்டு விட்டது. பாணின் விலையும் அதிகரித்திருக்கிறது. இதேபோன்று அரிசி மற்றும் உணவுப்பண்டங்களின் விலைகளும் விரைவில் உயரும் எல்லாச் சாத்தியங்களும் உண்டு.

நிவாரணம் மற்றும் மானியங்களை வெட்டப் போவதாக, நீக்கப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பின் செயல் வடிவத்தின் முன்னோடியே மா மற்றும் பாணின் விலை உயர்வுகள்.

இவ்வாறு செய்வதைவிட அரசுக்கு வேறு வழி எதுவும் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் நிதிக்கும் அதிகமாகப் போருக்குச் செலவாகின்றது. அதனாலேயே நிவாரணங்கள், மானியங்களை நிறுத்தவேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது - என்று பொருளியல் விமர்சகர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். போர் தொடர்ந்தால் நாட்டில் பொருண்மியப் பேரழிவு நிகழும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

எனினும் போர் அடுத்த வருடமும் நீடிக்கும் என்றும் 1997 இறுதியிலேயே போர் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்றும் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். போருக்கான கால எல்லையைச் சரியாக ஒரு வருடத்தால் நீடித்திருக்கிறார் அவர்.

போரைத் தொடரும்போது, நீடிக்கும் போது அரசாங்கத்தின் வருமானம் வீழ்ச்சி அடையும். தனியார் துறையின் உற்பத்தியும் சரியும். அவற்றின் விளைவு பொருளியற் பேரழிவும் சீரழிவுமாகவே இருக்கும்.

போரினால் அரசுக்கு உண்டாகும் பளுவை அது மக்கள் மீது சுமத்திவிடும். அதில் இரண்டு பேச்சுக்கு இடமில்லை. பொருளாதாரப் பேரழிவு என்பது வறுமை, பசி, பட்டினி, வேலையின்மை, உற்பத்தி வீழ்ச்சி என்று பலவாகப் பெருகும். அதாவது மக்களுக்குச் சொல்லொண்ணாக் கஷ்டங்களையும் பாதிப்புகளையும் உண்டாக்கும்.

பொருளாதாரமானது நலிவடைய நலிவடைய, மக்களின் வாழ்க்கை நிலையும் கீழ்நோக்கிச் சென்று பல சமூகக் கொடுமைகளை உருவாக்கும்.

இத்தகைய ஒரு பயங்கர நிலையைத் தோற்றுவிக்கக் காரணியாக இருக்கும் போர் தொடர வேண்டுமா, நீடிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து அரசியல் தலைவர்கள் மிகவும் ஆழமாகவும் நிதானமாகவும் சமூகப் பார்வையுடனும் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

பொருண்மியப் பலமும் சீர்நிலையும் இல்லாமல் அரசியல் சுபீட்சம் அர்த்தமற்றதாகி விடும். அரசியல் என்பது மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் உறுதுணையாக வேண்டும். மக்கள் வாழாமல் சாகும் போது அரசியல் செல்லாக் காசாகி விடும்.

எனவே போருக்குப் பதில் வேறு வழிகளால் இன்றைய பூசலை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து அக்கறையுடன் சிந்திக்கப்பட வேண்டும்; யதார்த்தம் உணர்ந்து செயற்பட வேண்டும். இல்லையேல் நாடும் மக்களும் அழிந்து போகும் பேராபத்து உண்டு.

# நரசிம்மராவின் தலைமைக்கு கட்சிக்குள் கடும் எதிர்ப்பு!

புதுடில்லி, ஓக 1

லகுபாய் பதக் மோசடி வழக்கில் குற்றம் சுமத்தப்படுவதற்காக முன்னாள் பிரதமர் நரசிம்மராவ், புதுடில்லி பெருநகர மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜராக வேண்டிய சூழ்நிலை உருவாகி வருவதை அடுத்து —

காங்கிரஸ் கட்சிக்குள் அவரது தலைமைக்கு எதிரான குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

சர்வதேச ஊறுகாய் வியாபாரியான லகுபாய் பதக் என்ற வர்த்தகரிடம் நான்கு கோடி ரூபா மோசடி செய்ததாக சர்ச்சைக்குரிய சாமியாரான சந்திர சுவாமிக்கு எதிராக டில்லி பெருநகர மாஜிஸ்திரேட் முன்னிலையில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவும் தனிப்பட்ட முறையில் நாளைய தினம் நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராக வேண்டும் என டில்லி பெருநகர மாஜிஸ்திரேட் உத்தரவிட்டிருக்கின்றார்.

இந்த உத்தரவை ஆட்சேபித்து டில்லி மேல் நீதிமன்றத்தில் நரசிம்மராவின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேல் நீதிமன்றம் நிராகரித்து, நீதிமன்றத்தில் நரசிம்மராவ் ஆஜராக [illegible]டும் என்ற மாஜிஸ்திரேட்டின் உத்தரவை உறுதிப்படுத்தியிருப்பதை அடுத்தே கட்சிக்குள் நரசிம்மராவுக்கு எதிரான குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன.

''நரசிம்மராவுக்கு எதிரான இத்தீர்ப்பு காங்கிரஸ் கூடாரத்தைக் கலகலக்க வைக்கும்; ஆனால் ஐக்கிய முன்னணி அரசின் ஸ்திரத் தன்மையைப்பாதிக்காது''. — என்று அரசியல் ஆய்வாளர் கியூவல் வர்மா தெரிவித்தார்.

நரசிம்மராவ் கட்சித் தலைமையிலிருந்து விலகிய பின் அல்லது விலக்கப்பட்ட பின் காங்கிரஸ் கட்சியும், ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் இணையும் என பிரபல எழுத்தாளர் குல்தீப்நய்யார் கருத்துக் கூறியுள்ளார்.

நீதிமன்றத் தீர்ப்பு வந்ததுமே கட்சித் தலைமைப் பதவியிலிருந்து நரசிம்மராவ் ராஜினாமாச் செய்திருக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான கருணாகரன் கருத்துக் கூறினார்.

''நீதிமன்றத் தீர்ப்பு காங்கிரஸ் கட்சிக்கு கடவுளாக அனுப்பிய வரப்பிரசாதம். இப்போதேனும் நரசிம்மராவுக்கு உரிய வழியைக்காட்டா விட்டால் அந்தக் கட்சி ஒரு கட்சியாக இருப்பதற்கே யோக்கியதை அற்றது'' — என ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்'' பத்திரிகை தெரிவிக்கிறது.

மாஜிஸ்திரேட் நீதிமன்ற உத்தரவு மற்றும் அதை உறுதிப்படுத்திய டில்லி மேல் நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவற்றுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதே —

நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தவிர்ப்பதற்கு நரசிம்மராவுக்கு தற்போதுள்ள ஒரே வழி என சட்ட அறிஞர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)

## ஒலிம்பிக் குண்டுவெடிப்பு: பாதுகாவலர் காரணமா?

அட்லாண்டா, ஓக. 1

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் அட்லாண்டா நகரில் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு காவலரேகாரணம் என்ற சந்தேகம் இப்போது வலுத்து வருவதாக அமெரிக்கப் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டன.

தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த ரிச்சர்ட் ஜூவல் என்ற காவலர் தான் மூதன் முதலில் அந்த வெடிகுண்டைக் கண்டு பிடித்து— ஆட்களை எச்சரித்து— உயிர் இழப்புக்களின் அளவைக்குறைத்தவர் என்று கூறப்படுகின்றது.

இந்தக் குண்டு வெடிப்பில் இருவர் பலியானதும் 110 இற்கும் அதிகமானோர் காயமடைந்ததும் தெரிந்தவையே.

## "நான் நிரபராதி!" ராவ் கூறுகின்றார்

### பதவி விலகவும் அவர் மறுப்பு

புதுடில்லி, ஓக. 1

லகுபாய் பதக் ஏமாற்றப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் தமக்கு எதுவும் தெரியாது என்றும்—

அந்த விடயத்தில் தமக்குத் தொடர்பு எதுவும் இல்லை என்றும்—

தாம் நிரபராதி என்றும்—

முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கூறியிருக்கின்றார்.

லகுபாய் பதக்கிற்கு ஆதரவாக நியூயோர்க்கில் வைத்து தாம் வாக்குறுதி அளித்ததாகக் கூறப்படும் திகதிகளில் தாம் நியூயோர்க்கில் இருக்கவே இல்லை என்றும் நரசிம்மராவ் நேற்றுமுன்தினம் மாலை செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

மேல் நீதிமன்றத் தீர்ப்புப் பற்றிக் குறிப்பிட்ட அவர்—

''சட்டம் தனது கடமையைச் செய்யும். நாம் அனைவரும் அதற்குக் கட்டுப்பட்டவர்கள்''— என்றும் கூறினார்.

தமது ஆட்சேபனையை நிராகரித்து மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினால் காங்கிரஸ் கட்சியில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இந்தத் தீர்ப்புக்காக நான் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகப் போவதுமில்லை''— என்றும் அவர் சொன்னார், (உ)

## நான்காவது தடவையாக தங்கப்பதக்கம்

அட்லாண்டா, ஓக. 1

ஒலிம்பிக் போட்டிகளில் நீளம்பாய்தலில் அமெரிக்க வீரரான கார்ள் லூயிஸ் 8.5 மீற்றர் நீளத்தைப்பாய்ந்து ஒலிம்பிக் வரலாற்றில் நான்காவது தடவையாக தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் கார்ள் லூயிஸ் குறுந்தூர ஓட்டங்களிலும் நீளம் பாய்தலிலும் கொடி கட்டிப்பறந்தவர்.

இம்முறை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளிலும் பங்கு பற்றி நீளம்பாய்தலில் தங்கப் பதக்கத்தைப் பெற்றதன் மூலம் நான்கு ஒலிம்பிக் போட்டிகளில் நீளம்பாய்தலில் தொடர்ந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். (இ-10)

## ஜெயலலிதாவை ராஜினாமாச் செய்ய முன்னாள் அமைச்சர் கோரிக்கை

சென்னை, ஓக. 1

''அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பதவியிலிருந்து செல்வி ஜெயலலிதா இராஜினாமாச் செய்யவேண்டும்.''

இவ்வாறு கட்சியிலிருந்து அண்மையில் ஜெயலலிதாவால் நீக்கப்பட்ட — கட்சியின் முன்னாள் மூத்த துணைப் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான எஸ். டி. சோமசுந்தரம் கோரியிருக்கின்றார்.

சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலில் அ. தி. மு. க. படுதோல்வியடைந்த பின்னரும் முன்னாள் முதலமைச்சர் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகாமல் அதில் விடாப்பிடியாக இருப்பதாக சோமசுந்தரம் குறை கூறியிருக்கின்றார்.

ஜெயலலிதாவுக்கு தாம் அனுப்பி வைத்த கடிதம் ஒன்றிலேயே சோமசுந்தரம் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார். (உ)

## குளிர்பானம் கடலாக ஓடியது

மணிலா, ஓக. 1

ஜேர்மன் நாட்டில் நியூரம் பேர்க்— மியூனிச் நெடுஞ்சாலையில் 'கொக்கோ-கோலா'' பானம் ஏற்றி வந்த இராட்சத வாகனம் ஒன்று கவிழ்ந்ததில் நெடுஞ்சாலை குளிர்பானக் கடலாக மாறியது.

சுமார் 32 லட்சம் ரூபா பெறுமதியான குளிர்பானம் வீதியில் கடலாகப் பெருக்கெடுத்து ஓடியது. (உ)

## நடராஜனை விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

சென்னை, ஓக. 1

வேலூர் சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் நடராஜனை வருவாய், புலனாய்வுப் பிரிவினர் இரண்டு நாள்கள் விசாரணை செய்வதற்கு சென்னைப் பெருநகர மாஜிஸ்திரேட் நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கின்றது

அறுபத்தியைந்து லட்சம் ரூபா பெறுமதியான சொகுசு கார் ஒன்றை இறக்குமதி செய்தது தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்துவதற்கே நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கின்றது.

நடராஜனின் மனைவியும், ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியுமான சசிகலா கடந்த ஜூன் மாதம் செயலாக்கல் பிரிவில் ஆஜராகச் சென்ற சமயம் பத்திரிகையாளர்களையும், பத்திரிகைப் படப்பிடிப்பாளர்களையும் நடராஜன் தாக்கினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் நடராஜன் [illegible] பட்டிருக்கின்றார் என்பது தெரிந்ததே. (உ)

## சுதாகரனை ஆஜராக உத்தரவு

சென்னை ஓக. 1

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் வி. என். சுதாகரனை செயலாக்கல் பிரிவினர் நேற்று விசாரணை செய்தனர்.

அந்நிய செலாவணி கட்டுப்பாடு சட்ட மீறல் தொடர்பாக அவர் செயலாக்கல் பிரிவில் ஆஜராக வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் அளித்த [illegible] படி அவர் நேற்று [illegible] செயலாக்கல் பிரிவில் ஆஜரானார். (உ)

### ஈராக் ஜனாதிபதி கொலை முயற்சி

## அமெரிக்கா மறுக்கிறது

வாஷிங்டன், ஓக. 1

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனைக் கொல்வதற்கு அமெரிக்கா சதி செய்ததாக வெளியான குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா மறுத்துள்ளது.

ஜனாதிபதி சதாம் ஹுசைனின் மாளிகைக்கு அருகில் குண்டு ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்ததும் —

அவர் மாளிகையில் இருந்து வெளியே சென்று ஐந்து நிமிடங்களின் பின்னர் அந்தக் குண்டு வெடித்ததால் அவர் மயிரிழையில் உயர் தப்பியதும் தெரிந்ததே.

இச் சம்பவத்தை அடுத்து இதில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் 300 படையினர் வரை கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

1990 - 91 வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஈராக் ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட பெரிய சம்பவமாக இது கருதப்படுகிறது. (இ)

## ஜப்பானில் தற்கொலை அதிகரிப்பு

ஜப்பானில் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் மட்டும் 22 ஆயிரத்து 445 ஜப்பானியர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவர்களில் 14 ஆயிரத்து 874 பேர் ஆண்கள். 7ஆயிரத்து 571 பேர் பெண்கள்,

பணக்கார நாடான ஜப்பானில் பொருளாதார நெருக்கடி காரணமாகவே பலர் தற்கொலை செய்து கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

### குகன் ஸ்ருடியோ ஸ்தாபனம்

பொது மக்கள் வசதி கருதி 2ஆம் குறுக்குத் தெருவில் பருத்தித்துறை தபாற்கந்தோருக்கு கிழக்கு முசமாகப் போகும் றோட்டில் 31.7.96 இல் இடம் மாறியுள்ளது.

குகன் ஸ்ருடியோ,
பருத்தித்துறை.

(சி-2697)

## புதிய நாவலர் கல்வி நிலையம்

நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

### ஆண்டு- 5

விசேட புலமைப்பரிசில் வகுப்பு- 1996 (செப்ரெம்பர்)

**2** ஆவது பிரிவு ஆரம்பம்:- **03-08-96**
சனி மாலை 3 மணி

★ புதிய அனுமதிகளை **05-08-96** க்கு முன் பெற்றுக் கொள்ளவும். (41771)

## கண்ணீர் அஞ்சலி

### ஏ. எல். ஏபிரகாம் M. B. B. S.

ஏபிரகாம் என்னும் நாமத்தின் ஊடே
ஏற்றமிகு பணிசெய்திட்டோன்
வைத்திய கலாநிதியாய் — மக்களிடையே
ஏற்றத்தாழ்வு பார்த்திடாது ஏற்ற பணியினை
சிறப்புடன் தன் சுற்றம் வளர
சீர்மையுடன் பணிபல புரிந்து — நின்பணி
முடிந்ததென மரிய அன்னை பதம் போயினையோ?
முடிவுற்ற நின்பணி நிதமும் நின்றிடும்
எமது நெஞ்சகத்தே.

குருநகர் சனசமூக நிலைய
நிர்வாகத்தினர்.

(சி/2695)

## நீங்காத நினைவில்
## 31ஆம் நாள்



பூவுலகில்: **29-04-1976**

விண்ணுலகில்: **04-07-1996**

### சுகந்தன் நவரட்ணசிங்கம்

(மாணவன், யா/பரியோவான் கல்லூரி
1995 க.பொ.த. உயர்தர கணிதப் பிரிவு)

எம் குடும்பத்தின் குலவிளக்காய், அன்புச் செல்வமாய்
அறவழி காட்டும் ஆற்றலுள்ள தலைவனாய்
அன்புகாட்டும் சகோதரனாய், நல்ல நண்பனாய்
துன்புற்றோர் துயர்துடைக்கும் அன்பனாய்
இறைவன் எமக்களித்த மாபெரும் கொடை நீங்கள்
அண்ணா! மகனே! சுகந்தன்!
நித்திய வான்வீட்டில் உம்மை மீண்டும் சந்திக்கும்வரை
கண்ணீர் மல்கி நிற்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக **3-8-96** சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு வளன்புரம், கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற்பலியில் அனைவரும் கலந்து ஒன்றாய் வழிபட அன்புடன் அழைக்கின்றோம்.

மறைவைக் கேட்டு எம் துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எம் நன்றிகள்.

இவரது பிரிவால் துயருறும்;
தந்தை, தாய், சகோதரிகள்.
G. E. நவரட்ணசிங்கம் (தபால் அதிபர்),
குணசீலி நவரட்ணசிங்கம்
(மனையியல் ஆசிரியை),
சுகிர்தா & சுகன்யா
(மாணவிகள், வேம்படி மகளிர் கல்லூரி).

போயிட்டி,
இளவாலை.

தற்போதைய முகவரி:
951/10, வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(41763)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 01-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## பீற்றர் பேர்சிவல் முத்திரை இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ். மத்திய கல்லூரியின் 180 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மத்திய கல்லூரியின் ஸ்தாபகரும் தமிழில் பாண்டித்தியம் பெற்றவருமான வண. கலாநிதி பீற்றர் பேர்சிவல் ஞாபகார்த்தமாக இன்று கொழும்பில் இரண்டு ரூபா பெறுமதியான முத்திரையும் முதல் நாள் உறையும் வெளியிடப்பட உள்ளன.

அதேசமயம் யாழ். மத்திய கல்லூரியின் 180 ஆவது ஆண்டு நிறைவுவிழா தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த விழா இன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற இருந்தது தெரிந்ததே. (இ)

### புலிகளுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வருடத்தில் பாதுகாப்புச் செலவுக்காக 3,800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டபோதிலும் இந்த ஏழு மாதங்களிலும் போர்ச் செலவு 5,000 கோடி ரூபாவைத் தாண்டிவிட்டதாகவும் —

போரின் காரணமாக தேசிய உற்பத்தியில் ஆறரை வீதம் விழுக்காடு ஏற்பட்டுள்ளதாகவும் —

இந்த நிலை நீடிக்க விடக்கூடாது; நீடிக்க விட முடியாது என்றும் — அமைச்சர் கூறினார்.

போரை இந்த நாட்டினால் இனித் தாங்க முடியாது என்றும் பேச்சுவார்த்தை மூலமான சமாதானம் அவசியம் என்பதனையும் அமைச்சர் பத்திரிகையாளர் மாநாட்டில் அளித்த பதில்கள் வலியுறுத்துவனவாக இருந்தன.

இதே வேளை, இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள், இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தி உள்ளது. (அ-3-10)

### ஷெல் வெடித்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச் சம்பவத்தில் வேலும் மயிலும் விஜயராஜ் (வயது 9), ராகவன் தீனதயாளன் (வயது 10), இராசு இராமேஸ்வரன் (வயது 13) ஆகிய சிறுவர்களே மரணமானார்கள்.

சம்பவதினம் மாலை சுமார் 5 மணியளவில் வீட்டின் பின்புறத்தில் ஷெல் வெடித்தது போல பயங்கரச் சத்தம் திடீரெனக் கேட்டதையடுத்து அவ்விடத்துக்கு வீட்டுக் காரர்கள் விரைந்தபோது மூன்று சிறுவர்களும் தூக்கி வீசப்பட்ட நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டனர் எனவும் —

என்ன நடந்தது எனத் தெரியாத நிலையில் சடலங்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்ததாகவும் —

சடலங்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

சடலங்கள் மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டன. (உ-15)

### நீதிமன்று...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராவின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுவின் மீதே உச்ச நீதிமன்றம் தற்போது— ராவுக்குச் சார்பாக — இடைக்கால உத்தரவு ஒன்றை வழங்கியிருக்கின்றது.

எனினும் ராவின் மனு தொடர்பான உச்ச நீதிமன்ற விசாரணைகள் எதிர் வரும் 12 ஆம் திகதி நடைபெறும். அந்த விசாரணை முடிவு வரும் வரை இந்த இடைக்காலத் தடை உத்தரவு நடைமுறையில் இருக்கும்.

(மேலதிக செய்திகள் [illegible] ஆம் பக்கத்தில்) (உ-8)

## பாண் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று தொடக்கம் பாணின் விலை ஐம்பது சதத்தால் உயர்த்தப் பட்டுள்ளது.

இதுவரை ஏழு ரூபாவாக விற்கப்பட்ட பாண் இன்று தொடக்கம் 7 ரூபா 50 சதமாக உயர்த்தப் பட்டிருப்பதாக பேக்கரி உரிமையாளர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

### குடாநாட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரிசோதனையை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வேளை நோயாளி தாமாகவே — வைத்திய ஆலோசனைக்கு எதிராக வைத்தியசாலையைவிட்டு வெளியேறிவிட்டார் என்றும் கூறப்பட்டது.

மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாத நிலையிலேயே இந்நோயாளி வீடு சென்றுள்ளது ஒரு பாரதூரமான விடயம் என வைத்திய வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

முப்பத்தெட்டு வயதான இந்த நபர் வலிகாமம் மேற்கைச் சேர்ந்தவர். ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார். (உ-15)

## யாழ். மத்திய கல்லூரி

### 180 ஆவது அகவை நினைவுக் கூட்டம்

இன்று யாழ். மத்திய கல்லூரியின் 180 ஆவது அகவைஸ்தாபகர் நினைவுக் கூட்டம் தவிர்க்க முடியாத (எதிர்பாராத) காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இ. இராசாராம் (தலைவர்)
C. திருநாவுக்கரசு (உபசெயலாளர்)

யாழ். மத்திய கல்லூரி
பழைய மாணவர்
சங்கம்.

31-07-1996 (C/2696)

## தவறிவிட்டது

80 வருடகால சாரணியவரலாற்றில் கடைசி 25 வருடகால நிகழ்வுகளை புகைப்படம் மூலம் பிரதிநிதிப்படுத்தும் புத்தகம் (LogBook) அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது தவறிவிட்டது. இது பற்றி தகவலறிந்தோர் அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

—அதிபர்

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி,
சாரணர் குழு.

(41769)

## மரண அறிவித்தல்

திருமதி
### இராசம்மா பொன்னம்பலம்

திருமதி இராசம்மா பொன்னம்பலம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சி. பொன்னம்பலம் (இளைப்பாறிய தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி தவமணி, எஸ். பீ. சிவஞானம் (L L. B. சட்டத்தரணி), திருமதி சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. இ. காசிப்பிள்ளை B. Sc. (இளைப்பாறிய ஆசிரியர்), டாக்டர் ம. சந்திரசேகரம், திருமதி இரஞ்சனி சிவஞானம் ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி தயாளினி அருள்நேசன் (கொழும்பு), கா. தயாபரன் (இந்தியா), கா. அகிலநாதன் (கணனி மாணவன், லண்டன்), செல்வி ச. ஷாமினி (நான்காம் ஆண்டு மருத்துவ மாணவி, யாழ். மருத்துவபீடம்), செல்வி கா. உஷாயினி (பொறியியல் மாணவி, பேராதனை வளாகம்), ச. சிவராம் (பொறியியல் மாணவன் மொறட்டுவ வளாகம்), செல்வி சி. சிந்துஜா (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி), சி. அருள்நேசன் (கணக்காளர், கொழும்பு)ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், அ. அருணனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 1 - 8 - 96 ஆம் திகதி வியாழக்கிழமை 10 மணிக்கு கீழ்க்காணும் விலாசத்தில் நடைபெறும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எஸ். பீ. சிவஞானம்,
சட்டத்தரணி.
(மகன்)

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(41767)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org